**06.08.2022**

**OS.No. 136/2020 DW : 2, திரு. சின்னதுரை**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

என் தந்தை பெயர் கருப்புசெஞ்சி நாயக்கர் இல்லைஎன்றும் கருப்புசெஞ்சி நாயக்கர் என்று குறிப்பிட்டு மோசடி ஆவணங்கள் நாங்கள் தயார் செய்வதாக வாதிகள் எங்களுக்கு வா.சா.ஆ.13 வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினார்கள். அந்த அறிவிப்பிற்கு நாங்கள் எந்த பதிலையும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. 09.02.2009ல் நான் மற்றும் 5 பேர் சேர்ந்து சென்னையை சேர்ந்த ராஜா என்பவருக்கு என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.22 கிரைய ஆவணத்தை எழுதி கொடுத்தோம். அந்த ஆவணத்திலும் என் தந்தையின் பெயர் செஞ்சி நாயக்கர் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. கருப்பு செஞ்சி நாயக்கர் என்று ஏன் எழுதவில்லை என்று பத்திர எழுத்தரிடம் கேட்டேன் அவர் எழுதியதை திருத்த முடியாது என்று சொல்லிவிட்டார். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எழுதி கொடுத்த ஆவணங்கள் அனைத்திலும் என் தந்தையின் பெயரை செஞ்சி நாயக்கர் என்று மட்டுமே கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் கொடுக்கும் ஆவணங்களில் மட்டும் என் தந்தையின் பெயரை செஞ்சி நாயக்கர் என்று சரியாக போட்டுக் கொள்வேன் என்றும் இல்லாவிட்டால் கிரையம் வாங்குபவர் சண்டைக்கு வந்து விடுவார்கள் என்று அவ்விதம் எழுதிக் கொள்வேன் என்றால் சரியல்ல. என் சகோதரிக்கு எழுதி கொடுத்த வா.சா.ஆ.7 செட்டில்மெண்ட் ஆவணத்தில் மட்டும் என் தந்தையின்

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

பெயர் கருப்புசெஞ்சி நாயக்கர் என்று பொய்யாக எழுதியிருக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் கண்டுள்ள கருப்புசெஞ்சி நாயக்கர் என்னுடைய தந்தை என்று காட்டுவதற்காகவே செட்டில்மெண்ட் ஆவணத்தில் என் தந்தையின் பெயரை கருப்புசெஞ்சி நாயக்கர் என்று பொய்யாக எழுதிக்கொண்டேன் என்றால் சரியல்ல. வாதிகளின் சொத்தை அபகரிப்பதற்காக மட்டும் என் தந்தையின் பெயரை கருப்புசெஞ்சி நாயக்கர் என்று கூறிவருகிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே கருப்புசெஞ்சி நாயக்கர் என் தந்தையாக இருந்திருந்தால் அவர் சின்னா நாயக்கருடன் 65 சென்ட் பிரித்திருந்தால் நாங்கள் தலா 15 சென்ட்-ஐ பிரித்திருக்க மாட்டோம் என்றால் சரியல்ல. என் பெரியப்பா வெங்கடாசல நாயக்கர் அவருக்கு 2 மகன்கள். அவர்கள் ராமன், ராதா ஆவார்கள். ராமன், ராதாவுக்கும் தலா 7.5 சென்ட் வந்திருக்க வேண்டும். ஆனால் ராமனுக்கு அரசு வேலை கிடைத்து விட்டதால் ராதா 15 சென்ட்-ஐ எடுத்துகொண்டார். நாங்கள் செட்டில்மெண்ட் எழுதி விவரத்தை ராமனிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ராமன் என்பவர் 65 சென்ட் பொறுத்து செட்டில்மெண்ட் ஆவணம் எதையும் எழுதவில்லை. வாதிகள் வீடுகட்டுவதை நாங்கள் ஆட்சேபனை செய்தபோது தான் செட்டில்மெண்ட் பற்றி வாதிகள் மற்றும் ராமன், சரோஜா ஆகியோர்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் வீட்டு வரி ரசீதுகளில் காமாட்சி பெயர் இருக்கிறது. காமாட்சிக்கு நான் 10 சென்ட் பொறுத்து செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தால்

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

அவர் வரி செலுத்தி வருகிறார். தாவா சொத்தில் வீடே இருந்தது இல்லை என்றால் சரியல்ல. 2019ல் தான் வாதிகள் வீடுகட்ட ஆரம்பித்தார் என்றும் அதுவும் கட்டிமுடிக்கவில்லை என்றால் சரியல்ல. கட்டிமுடிக்கப்பட்டதா வரி விதிக்கமாட்கள் என்று சொன்னால் அங்கு வீடு இருக்கிறது. நான் தாக்கல் செய்திருக்கும் வீட்டு வரி ரசீதுகள் ஊருக்குள் இருக்கும் எங்களுது வேறு வீட்டிற்கு உரியது என்று சொன்னால் சரியல்ல. அது கூரைவீடாகும். அது 1982ல் மழையில் விழுந்துவிட்டது. நாங்கள் மூவரும் செட்டில்மெண்ட் ஆவணங்களை எழுதி கொடுக்கும் போது சர்வே எண்ணின் உட்பிரிவுகளை காட்டியிருக்கிறோம். சின்னா நாயக்கரும், கருப்புசெஞ்சி நாயக்கரும் தலா 65 சென்டாக பிரித்துக் கொண்டார்கள். 65 சென்ட்க்கு கருப்புசெஞ்சி நாயக்கர் பெயரில் பட்டா இல்லை. பத்திரம் தான் இருக்கிறது. வெங்கடாசலம், சின்னசாமி ஆகியோர்கள் பெயரில் பட்டா இல்லை என்றால் சரியல்ல. அது தாக்கல் செய்ய இருக்கிறோம். 1962 வருடத்திய கிரைய ஆவணத்தின் படி 1 ஏக்கர் 30 சென்ட்க்கு சின்னா நாயக்கர் மற்றும் கருப்புசெஞ்சி நாயக்கர் பெயரில் இன்றுவரை கூட்டுபட்டா தான் இருக்கிறது என்றும் நாங்கள் தில்லுமுல்லு சர்வே எண்ணை உட்பிரிவு செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. நான் வருவாய் துறையினரை சரிகட்டி ஆவணங்களை உருவாக்கிக் கொண்டோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12ல் சின்னா நாயக்கரின் மகன் பெயரில் இருப்பதை போல இன்றுவரை கூட்டுபட்டாவாகத் தான் இருக்கிறது என்றால் சரியல்ல. நாங்கள் செட்டில்மெண்ட்

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

ஆவணங்களில் சொல்வது போல் சொத்து எங்களது பூர்வீக சொத்து என்றால் நாங்கள் செட்டில்மெண்ட் ஆவணங்களை எழுதி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் சொத்து தானாகவே வாரிசுகளுக்கு சேர்ந்துவிடும் என்றும் சொன்னால் சரியல்ல. பிராதுபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

I Additional District and Sessions Judge,
Tiruvallur.